அவைகள் சரியாக செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருப்பதால் இன்ஸ்பெக்டர் ஆப்டபேக்டரீஸ் மூலமாக அவற்றைக் கண்காணிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர்கள் தரப்பிலிருந்தோ அல்லது தொழிற்சங்கத் தரப்பிலிருந்தோ புகார் ஏதும் வரவில்லையென்றாலும்கூட அரசு சட்டப்படி இதுகுறித்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கக் கூடாது என்பதால் ஒரு குழு போட்டு சட்டத்திற்கு புறம்பாக எங்காவது ஏதாவது நடந்திருக்கிறதா என்பதைப் பற்றி அரசு விசாரணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வராத புகார்களுக்கு இவ்வளவு தூரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்காலத்து வாங்குகிறார்கள் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். வேலூர் துணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் சமீபத்தில் 7—1—1987 அன்று ஆய்வு செய்ததில் தேவையான பதிவேடுகளும், அறிவிப்புகளும் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

(ஆ) தக்காளி வீரிய ஒட்டு விதைகள் சரியாக முளைக்காததால் விவசாயிகளுக்குப் பாதிப்பு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக வேளாண்மைத் துறையால் விநியோகிக்கப்பட்ட, பங்களூர் இந்தோ—அமெரிக்கன் சொசைடி தயாரித்த தக்காளி வீரிய விதைகள், இந்த ஆண்டு தக்காளி பட்டத்தில் முளைக்காமல் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதால், மேற்படி சொசைட்டியிடம் இருந்து விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தரவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழகத்தில் காய்கறி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் குறுகிய பரப்பளவில் உற்பத்தியினை அதிகரிக்கவும், வருவாயினை பெருக்கவும் ஏதுவாக தமிழகத்தில் 1985-86 ஆம் ஆண்டு மாநில அரசு திட்டத்தின்கீழ், வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் விநியோகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மிக அதிகவிலை உள்ளதால் சாகுபடியாளர்களிடையே விரிவாக புகுத்தும் நோக்கத்துடன் 25 விழுக்காடு விலையில் விதை விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் 18 கிலோ வீரிய ஒட்டு தக்காளி, கத்திரி, வெண்டை, குடமிளகாய், காரட், முட்டைக்கோசு மற்றும் முள்ளங்கி விதைகள் விநியோகம் செய்யப்பட்டு 1985—86 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

2. இத்திட்டத்திற்கு காய்கறி சாகுபடியாளர்களிடம் அமோக வரவேற்பு காணப்பட்டதால் நடப்பு ஆண்டில் (1986–87) வீரிய காய்கறி விதைகள் ஏழு இனங்களில் 37.5 கிலோ அனைத்து மாவட்டங்களிலும் விநியோகம் செய்யப்பட்டது. இதனால் 3,200 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். தக்காளி விதையைப் பொறுத்த வரையில் பெங்களூரிலுள்ள இந்தோ—அமெரிக்கன் நிறுவனத்திலிருந்து சென்ற ஆண்டு போலவே, நடப்பு ஆண்டிலும் 18 கிலோ விதைகள் 1,450 விவசாயிகளுக்கு 10 கிராம் அளவில் சிறு பொட்டலங்களாக மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், தக்காளி வீரிய ஒட்டு விதைப்பொட்டலத்துடன் பயிர் சாகுபடி பற்றிய கையேடு குறிப்பும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

3. தோட்டக்கலைத் துறையின் களப்பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் தக்காளி விதைகள் அனைத்து இடங்களிலும் நல்ல முறையில் முளைத்தது என்று தெரிய வருகின்றது. என்றாலும் முளைத்த தக்காளி நாற்றுகளுக்கு

பயிர் பாதுகாப்பு முறைகள் சம்பந்தப்பட்ட விவசாயிகளால் தக்க தருணத்தில் எடுக்காததால் "புள்ளிவாடல் நோய்" என்ற ஒரு வகை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு தக்காளி நாற்றுகள் ஓரிரு இடங்களில் சேதம் அடைந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

4. ஆகவே, வழங்கப்பட்ட தக்காளி வீரிய ஒட்டு விதைகள் முளைக்காமல் விவசாயிகளுக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது என்ற கூற்று ஆதாரமற்றது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்காளி விதை முளைக்காததால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துங்கூட 'முளைக்காததற்கு ஆதாரமில்லை' என்று அறிக்கையில் சொல்லியிருப்பது வெந்தப் புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் இருக்கிறது. 25 ஏக்கரில் பயிரிட விலை உயர்ந்த தக்காளி வீரிய ஒட்டு விதைகள் கொடுத்தார்கள். இருந்தும் ஒரு ஏக்கரில் கூட சரியாக தக்காளி முளைக்கவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளில் நானும் ஒருவன் என்பதால் என்னுடைய சொந்த அனுபவத்தில் இதைச் சொல்கிறேன். தவறு நடந்திருக்கிறது என்பதை அதிகாரிகள் வந்து பார்வையிட்டு ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இங்கே அறிக்கையில் பாதிப்பு ஒன்றுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படித் தவறான தகவல் தந்த அதிகாரிகள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இது குறித்து விசாரணை நடத்தினால் நானே நடந்ததைச் சொல்ல தயாராக இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்படித் தவறான தகவலை அதிகாரிகள் தந்தால் அது எப்படி சரியாகும்? விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் தவறான தகவல் தந்த அதிகாரிகள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதிப்பு இல்லையென்று சொல்லவில்லை. பாதிப்பு கொஞ்சம் இருக்கிறது என்றுதான் அறிக்கையில் இருக்கிறது. அவ்வளவு பெரிய பாதிப்பு இல்லையென்றுதான்

1987 ஏப்ரல் 7] [திரு. ப. உ. சண்முகம்]

அதிகாரிகள் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். எந்த அரசாக இருந்தாலும் அதிகாரிகள் கொடுப்பதை வைத்துத்தான் இங்கே தகவல்களைக் கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமேயானால், அதுபற்றி அவர் எழுதி கொடுத்தால், அரசு பரிசீலிக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறைச் செயலாளரிலிருந்து கீழ் மட்ட அதிகாரி வரை எல்லோருக்கும் இதுபற்றிச் சொல்லியும் பதில் ஒன்றும் இல்லையென்றதால்தான் நான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். ஒரு ஏக்கருக்கு 9,500 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிப் பயிரிட்டார்கள். 25 பெர்சன்ட் விலை என்றும் 75 பெர்சன்ட் மானியம் என்றும் சொல்லிக் கொடுத்தார்கள். அப்படியும் ஒரு தக்காளிகூட சரியாக வரவில்லை. ஆனால் அங்கே விதை வாங்கி கத்தரிக்காய் பயிரிட்டதில் விளைந்தது என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அதுமட்டுமல்ல, தக்காளி முளைத்ததில் கூட நோய் இருந்ததால் பிடுங்கி விடுங்கள் என்று அதிகாரிகள் சொன்னார்கள். இன்றைக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 25 ஏக்கரில் இதனைப் பயிரிட்டோம். ஆனால் அறிக்கையில் அதிகாரிகள் நஷ்டம் ஏற்பட்டதற்கு ஆதாரம் இல்லையென்று சொல்லியிருப்பதால் இது குறித்து விசாரணை நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியதை எடுத்துக்கொண்டு துறை இதுபற்றிப் பரிசீலிக்கும்.

(இ) கும்பகோணம் அருகிலுள்ள திருப்புவனம் தொழிற்பேட்டையிலிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் மு. இராசாங்கம் மற்றும் கி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.